## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No.40/2015

2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் திரு.கே.பழனிசாமி என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | நாகேந்திரன் | **வட்டம்** | சிங்கம்புணரி |
| **த.பெ** | பிச்சை ஆசாரி | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | சிங்கம்புணரி | **வயது** | 65/2023 |

**குறுக்கு விசாரணை:**

31.07.2015ல் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். உயிலில் உள்ள சொத்து விபரத்திற்கும் பிராதில் உள்ள சொத்து விபரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. 07.01.2004ம் தேதிய உயிலை நான் படித்துப் பார்த்திருக்கிறேன். மேற்படி உயிலில் சுந்தரம் செட்டியார் பக்கம் 2ல் தனக்கு பூர்வீக சொந்த சொத்துக்கள் யாதொன்றும் கிடையாது என்றும் சொத்துக்கள் முழுவதும் என் சுய முயற்சியாலும் சுய உழைப்பாலும் என்னால் சம்பாதிக்கப் பெற்றவைகள் ஆகும் என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.5/1/126, புதிய சர்வே நம்பர் 557/17பி ஆகும். தாவா சொத்தினுடைய வீட்டின் எண்.9/1/88 மற்றும் 9/1/89 ஆகும். மேற்படி வீட்டின் வரி விதிப்பு சொ.சி.ராமன் மற்றும் பழ.எழுவக்கோன் பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே ரோடு உள்ளது, தெற்கே சுந்தரம் செட்டியார் காம்பவுண்ட் சுவர் உள்ளது, மேற்கே சின்னவாடு செட்டியார் வீடு உள்ளது, கிழக்கே பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் சொத்து உள்ளது. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ளவாறு தாவா சொத்தின் அமைப்பு இருக்கிறதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு தான் தாவா சொத்தின் அமைப்பு இருக்கிறது என்றும் அதனை நான் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தும் அத்துடன் சேர்க்கை பெரிய சொத்தான ரோஜா லாட்ஜ் கட்டிடம் அதன் அடிமுனையும் நான் சொல்வது போல் பாதியில் சுந்தரம் செட்டியார் மற்றும் அவரது மக்கள் அடங்கிய இந்து பொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பொது சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. சுந்தரம் செட்டியாருக்கு எந்த தேதியில் இரண்டாவது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. முதல்

மனைவி இறந்த பிறகு இரண்டாவது திருமணம் நடந்தது. சுந்தரம் செட்டியார் மற்றும் அவரது மக்கள் பொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தங்களுக்குள் 1988ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக குடும்ப ஏற்பாட்டின் மூலம் அனுபவித்ததாக சொல்லியுள்ளேன், எந்த தேதியில் வாய்மொழி நடந்து என்று எனக்கு ஞாபகமில்லை. வாய்மொழிக்கு ஆதரவாக 20.061988ம் தேதியில் ஒரு கரைமால் ஆவணம் ஏற்ப்பட்டதாக சொல்லியுள்ளேன். அதன் அசல் பிரதிவாதியிடம் இருப்பதாக திருப்பத்தூர் டிமு கோர்ட் மு.வ.எண்.158/2009 வழக்கில் நான் ஆஜரான போது தெரிந்து கொண்டேன். மேற்படி அசல் ஆவணத்தை அந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கிறாரா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் அசல் ஆவணம் பிரதிவாதியிடம் இல்லை என்றும் மேற்படி நடவடிக்கையில் இருப்பதாக அவர் ஒப்புக் கொண்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எழுத்துமூலமாக தன்னிடம் அசல் இருப்பதாக ஒத்துக் கொண்ட விபரத்திற்கு ஆவணங்கள் எதுவும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது நிரூபணவாக்குமூலத்தில் கரைமால் ஆவணம் சுந்தரம் செட்டியார் குடும்பத்தினர் வசம் உள்ளது என்று தான் சொல்லியிருக்கிறேன், பிரதிவாதியிடம் இருப்பதாக சொல்லவில்லை. மேற்படி கரைமால் ஆவணத்தின் அசலை நான் பார்த்ததில்லை. நான் கிரையம் வாங்கும் போது என்னிடம் கரைமால் ஆவணத்தின் புகைப்பட நகல் கொடுக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றும் மேற்படி புகைப்பட நகல் ஆவணத்தை வழக்கிற்காக உற்பத்தி செய்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 07.01.2004ம் தேதியி உயிலின் அசலை நான் பார்க்கவில்லை. அதன் புகைப்பட நகலை தான் பார்த்திருக்கிறேன். 07.01.2004ம் தேதிய உயில் ஆவணம் சுந்தரம் செட்டியார் எழுதி வைத்த கடைசி உயில் ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 03.03.2005ம் தேதியன்று தாவா சொத்தை பிரதிவாதிக்குப் பாத்தியப்படுத்தி கொடிசில் உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றும் அது தான் அவரது கடைசி உயில் ஆவணம் என்றும் வழக்கிற்காக அதனை நான் மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல, மேற்படி கொடிசில் உயில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி கொடிசில் உயில் நல்ல மனநிலையில் பிறர் தூண்டுதலின்றி தான் செய்வதை நன்கு அறிந்து 07.01.2004ம் தேதிய உயிலில் சொல்லப்பட்ட சில சங்கதிகளைப் பொறுத்து மாற்றங்கள் செய்தும் மேற்படி உயிலில் காட்டப்படாத கருங்காலக்குடி சொத்தை குறித்தும் பிரதிவாதிக்கும் அவரது மகன்களுக்கும் அவரது சகோதரர்

மகன்களுக்கும் எழுதி வைத்திருக்கிறார் என்றும் அந்த கொடிசில் உயில் தான் இறுதி உயில் என்றும் 06.08.2005ல் சுந்தரம் செட்டியார் இறந்த பிறகு மேற்படி கொடிசில் உயில் அமுலுக்கு வந்துவிட்டது என்றும் நான் வழக்கிற்காக மேற்படி கொடிசில் உயிலை மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதாக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த கலா கடலூர் மவாட்டம் விருத்தாச்சலத்திலும் எனக்கு கிரையம் கொடுத்த மீனா கடலூர் மாவட்டம், புவனகிரியிலும் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். கலாவும் மீனாளும் தாவா சொத்தில் வசிக்கவில்லை என்றால் என்னிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். 07.01.2004ம் தேதியில் கலாவுக்கும் மீனாவுக்கும் தாவா சொத்தை பாத்தியப்படுத்திக் கொடுத்திருந்த சரத்து அமுல்படுத்தப்படவில்லை என்றும் சுந்தரம் செட்டியார் உயிருடன் இருக்கும் போதே மேற்படியார்களின் நடவடிக்கைகள் பிடிக்காமல் அதனை ரத்து செய்துவிட்டார் என்றும் மேற்படி கலாவும் மீனாவும் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒருபோதும் அடையவில்லை என்றும் அதனை என்னிடம் ஒப்படைத்ததாக சொல்லுவது சுத்தப் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. கார்த்திக்ராஜா தாவா சொத்தை மேற்பார்வையிட்டு வருவதற்கு கலாவும் மீனாவும் ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. 25.05.2012ல் கார்த்திக்ராஜா பெயரில் தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் துறை பதிவு ரத்து செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. கலா, மீனாள், கார்த்திக்ராஜா ஆகியோருக்கு தாவா சொத்தை 26.11.2009ல் கிரையம் கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் அனுபவமும் சட்டப்படி கிடையாது என்றும் நான் பெற்றுள்ள மேற்படி கிரையம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. 26.11.2009ல் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து டிசம்பர் 2012ல் தான் பெற்றுக் கொண்டேன் என்றால் பத்திரத்தை பார்த்து தான் சொல்ல முடியும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் பத்திரத்தை கொடுக்கச் சொல்லி சார்பதிவாளர் மற்றும் பிரதிவாதி பெயரில் நீதிப்பேராணை 2010ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் 2012ம் ஆண்டு தான் அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். ராஜா என்பவருக்கு வாகனங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்வதற்கு வாடகைக்கு விட்டதற்கு எழுத்துமூலமான பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தங்கள் எதுவும் கிடையாது. அட்வான்ஸ் எதுவும் வாங்கவில்லை. வாடகை ரசீது கொடுக்கவில்லை. மாதம் வாடகை ரூ.3500/-

என்பதை காட்ட எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்தை நான் எந்த காலத்தில் அனுபவம் செய்யவில்லை என்றும் அதனை வாடகைக்கு விடவில்லை என்றும் வழக்கிற்காக வாடகைக்கு விட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு கொடிசில் மூலம் தாவா சொத்து பாத்தியம் என்பதால் அதனை கிரையம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் தான் கிரையம் பெறப் போவதாக சொல்லி என்னை விலகிக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்க ஒப்புக்கொள்ளாமல் கலாவும் மீனாளும் எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த விரோதமும் இல்லை. திருப்பத்தூர் டிமு கோர்ட் ஓ.எஸ் 158/2009 என்ற வழக்கை பிரதிவாதி தாக்கல் செய்த பிறகு தான் நான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய காலத்தில் திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.143/2010 என்ற வழக்கினை பதிவு துறை அதிகாரிகள் மீது பிரதிவாதி தாக்கல் செய்த போது என்னுடைய கிரையப் பத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் இருந்தது, என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 30.10.2010ல் கலாவும், மீனாளும் ஓ.எஸ்.158/2009 வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார்கள் என்று சொன்னால் 2009-யே தாக்கல் செய்துவிட்டார்கள். திருப்பத்தூர் டிமு கோர்ட்டில் என்னை தரப்பினராக சேர்ப்பதற்கு பிரதிவாதி மனு கொடுத்ததற்கு பிறகு 2010ல் நான் ஆஜராகவில்லை, 2009லேயே ஆஜராகிவிட்டேன். மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போதே பிராதில் திருத்தம் கோரி இ.ம.எண்.486/2012 என்ற மனுவை 03.09.2012ல் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் 03.03.2005ல் கொடிசில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியாது. 23.09.2013ல் தனது மனைவி அமுதாவிற்கு பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் எழுதிக் கொடுத்தார் பதிவு செய்யப் போகும் போது நான் ஆட்சேபணை தெரிவித்தேன் அதன் பேரில் நிறுத்தி வைத்தார்கள். நிறுத்தி வைத்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.7ல் திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஓ.எஸ்.எண்.158/2009 என்ற வழக்கு கொடிசில் உண்மைத் தன்மை முடிவு செய்வதற்காக நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளதால் அவ்வழக்கின் முடிவின்படி இரு தரப்பினரும் செயல்பட வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8, 9 ஆகியவற்றின் அசல் பத்திரங்கள் இருக்கிறது, ஆனால் தாக்கல் செய்யவில்லை அவற்றின் சான்றிட்ட நகல்களை தான் வா.சா.ஆ.8, 9 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த பத்திரங்களின் நான் கிரையம் வாங்கியுள்ள சொத்து எந்த பத்திரத்தில் கட்டுப்பட்டிருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. வா.சா.ஆ.8, 9 ஆகிய பத்திரங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் கொடிசில் பிரதிவாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்படவில்லை என்றும் அதனால் அதனை உறுதிப்படுத்துவதற்காக 23.09.2013ல் தான செட்டில்மெண்ட் பத்திரம் எதுவும் எழுதப்படவில்லை என்றும் தனக்குள்ள பாத்தியத்தின் அடிப்படையிலேயே தான செட்டில்மெண்ட் பத்திரத்தை பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா சொத்தில் ராஜா ஒருபோதும் வாடகைக்கு இருக்கவில்லை என்றும் அப்படி இருந்தவரை தன்மையப்படுத்தி பிரதிவாதி தாவா சொத்திலிருந்து ராஜாவை வஞ்சக்கூட்டின் பேரில் வெளியேற வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 28.08.2014ம் தேதி பிரதிவாதி தாவா சொத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்கவும் இல்லை, ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 28.08.2014ல் அக்கிரம பிரவேசம் செய்தது சம்பந்தமாக காவல் துறையில் நான் மனு கொடுத்துள்ளேன். எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த மனு நகலையோ அதற்கான ரசீதையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 03.03.2005ம் தேதிய கொடிசிலின் படி பிரதிவாதி தனது தகப்பனார் 06.08.2005ல் இறந்த பிறகு உடனடியான தாவா சொத்திற்குள் வந்துவிட்டார் என்றும் அவர் தான் இன்றைய தேதி வரை தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரிதான். கலா, மீனாள் ஆகியோர் தாவா சொத்திற்கு தங்கள் பெயருக்கு வீட்டுவரி, மின் இணைப்பு முதலியவற்றை மாற்றிக் கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. வீட்டு வரி, மின் இணைப்பு எல்லாம் இன்று வரை பிரதிவாதி பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் பிரதிவாதியை நேரிலும் பொது மனிதர்கள் மூலமும் சந்தித்து ஆக்கிரமிப்பை நடவடிக்கையை கைவிட்டு சொத்தின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்கும் படி நான் கேட்கவில்லை. எனக்கு பிரதிவாதியால் எந்த தொந்தரவும் இல்லை என்றும் நான் தான் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற சட்ட விரோதமான முறைகளில் முயற்சி செய்தேன்

என்றும் சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சமயத்தில் 07.01.2004ம் தேதிய உயிலை நான் படித்துப் பார்த்தேன். மேற்படி உயிலில் ஜெயலெட்சுமி, சந்தானலெட்சுமி ஆகியோருக்கு எந்த சொத்தும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் சுந்தரம் செட்டியார் மகன் வரதராஜன் மற்றும் பேரன் கார்த்திக்ராஜா ஆகியோர் நடவடிக்கைகள் சரியில்லை என்று சொல்லி அவர்களுக்கும் எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கார்த்திக்ராஜாவிற்கு மேற்படி உயிலில் சொத்துக்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிந்திருந்தும் அவரை வற்புறுத்தி ஏன் கையெழுத்து வாங்கினேன் என்றால் அவராக தான் கையெழுத்துப் போட்டார். கொடிசில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதாக காவல் துறையில் நான் எந்தப் புகார் மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கலா, மீனாள் கொடிசில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதாக எனது தூண்டுதலின் பேரில் தான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றும் அவர்கள் சுயமாக மேற்படி வாசகங்களை சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தை நான் நல்ல எண்ணத்தில் சரியான பிரதி பிரயோஜனத்தில் கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் நல்லெண்ணத்தின் பேரில் மேற்படி கிரையத்தைப் பெறவில்லை என்றும் பிரதிவாதியின் பாத்தியத்தை மோசம் செய்வதற்காக அவர் ஆட்சேபணையையும் மீறி அவர் வழக்கு தாக்கல் செய்த பிறகு சொத்தில் வில்லங்கத்தை ஏற்படுத்துவதற்காக வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தை எழுதிக் கொடுப்பதற்கு கலா, மீனாள் மற்றும் கார்த்திக்ராஜா ஆகியோருக்கு எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்பதால் நான் பெற்றுள்ள கிரையம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. கொடிசில் மோசடியான ஆவணம் கிடையாது என்றும் அது உண்மையான ஆவணம் என்றும் அது என்னையும் என் முன்பாத்தியஸ்தரையும் கட்டுப்படுத்தும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நான் பார்த்ததே இல்லை என்றும் அதனால் எனக்கு சொத்தின் அமைப்பு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. சொத்தை நான் பார்த்தேன், பிரதிவாதியின் மனைவியிடம் நான் பேசினேன். நான் தாவா வழக்கில் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் எனக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி உயிலின் அடிப்படையில் தாவா சொத்தை அனுபவம் செய்து தன்னுடைய பெயரில் வரி விதிப்பு ஏற்படுத்தி வருகிறார் என்றும் அதனால் நான் வாங்கியுள்ள கிரையம் பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாது

என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணமான வா.சா.ஆ.3ஐ கலா, மீனாளை ஏமாற்றி பிரதிவாதியை மோசம் செய்வதற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.